2026 ஆகஸ்ட் மாதம் 05– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 107/2025

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 (LW1) – பிரியா |
| கணவர் பெயர்: | பிரசாத் |
| ஊர்: | உத்தமபாளையம் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | இல்லத்தரசி |
| வயது : | 33 |

05.08.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், உத்தமபாளையத்தில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். உத்தமபாளையம், பி.டி.ஆர்.காலனியில் குடியிருந்து வந்தேன். 1வது எதிரி அனீஷ் ரஹ்மானின் மகன் முகமது அசாரும், எனது மகன் ரித்தீஷும் 4ம் வகுப்பு பி.டி.ஆர்.காலனியில் உள்ள அலீலிக்மா மெட்ரிக்குலேசன் பள்ளியில் படித்து வந்தார்கள். மகனை பள்ளிக்கு அழைத்துச் செல்லும்போது 1வது எதிரியின்

மனைவிக்கும் எனக்கும் பழக்கம் ஏற்பட்டது. எனது கணவர் பிரசாத், பிரசாத் என்ற பெயரில் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார்.

2. 1வது எதிரி அனீஷ் ரஹ்மான் எனது கணவரிடமிருந்து கடன் வாங்கியிருந்தார். இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. 2024ம் வருடம் டிசம்பர் மாதத்தில் அனீஷ் ரஹ்மானுக்கும் எனது கணவருக்கும் சண்டை ஏற்பட்டது என்று சொன்னார்கள். காவல்நிலையத்தில் இருவர் மீதும் புகார்கள் கொடுக்கப்பட்டு, நிலுவையில் இருந்தன. இருவரும் வழக்கு சம்பந்தமாக ஜாமீன் பெற்று 2025ம் வருடம் ஜனவரி மாதம் வெளியே வந்துவிட்டார்கள். 23.01.2025ம் தேதி காலை 7.00 மணிக்கு எனது கணவர் வீட்டிலிருந்து குழந்தைகளுக்கு சிற்றுண்டி வாங்கி வருவதாக சொல்லி வெளியே கடைக்கு சென்றார். சென்றவர் வீடு திரும்பவில்லை.

3. எனது குழந்தைகளை பள்ளியில் விட்டுவிட்டு வீட்டிற்கு வந்தவுடன், சுமார் 8.45 மணியளவில் எனது கணவரின் நண்பர் செல்லப்பாண்டி என்னை அழைத்தார். எனது கணவர் ஜே.ஜே.லாட்ஜில் இறந்து கிடப்பதாக சொல்லி என்னை அழைத்தார். நான் லாட்ஜிக்கு சென்று பார்த்தேன். அப்போது எனது கணவர் இறந்த நிலையில் இருந்தார். ஜே.ஜே.லாட்ஜ் உரிமையாளர் ஜெயக்குமார் 1வது எதிரி அனீஷ் ரஹ்மானும், எனது கணவரும் மல்லுக்கட்டி சண்டைப்போட்டு இறந்ததாக சொன்னார். எனது கணவரை பார்த்தப்போது அவருக்கு வலது கண், கழுத்தின் நடுப்பகுதி, இடது தொடை ஆகிய பகுதிகளில் கத்திக்குத்து காயங்கள் இருந்தன.

4. காவல்நிலையம் சென்று சம்பவம் குறித்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் காவல்நிலையத்தில் நான் கொடுத்த புகார் ஆகும். அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது கணவர் வீட்டிலிருந்து சிற்றுண்டி வாங்க கடைக்கு எனது கணவரின் நண்பரின் இருசக்கர வாகனத்தில் சென்றார். சம்பவத்தின்போது எனது கணவர் வெள்ளை நிற சட்டை,

பச்சை நிற வேஷ்டி, பச்சை நிற துண்டு, முருகன் கோவிலுக்கு மாலை அணிந்திருந்தார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள TN 60 BX 8534 என்ற பதிவெண்கொண்ட இருசக்கர வாகனத்தில் சம்பவத்தின்போது எனது கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் ஆகும். அந்த இருசக்கர வாகனத்தின் புகைப்படம் (எண்ணம் 2) **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள TN 57 BQ 0637 என்ற பதிவெண்கொண்ட Creta கார் எனது கணவரின் நண்பர் ரமேஷ் என்பவரின் கார் ஆகும். அந்த கார் எனது கணவரின் பிரசாத் பைனான்ஸ் நிறுவனத்தில் சம்பவத்தின்போது நின்று கொண்டிருந்ததை அடித்து உடைத்தார்கள். அந்த காரின் புகைப்படம் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் சட்டை சம்பவத்தின்போது எனது கணவர் அணிந்திருந்த வெள்ளைநிற சட்டையாகும். அது முழுவதுமாக இரத்தம் படிந்து நிறம் மாறி காணப்படுகிறது. அது **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் பச்சைநிற வேஷ்டி சம்பவத்தின்போது எனது கணவர் அணிந்திருந்த பச்சைநிற வேஷ்டியாகும். அது இரத்தம் படிந்து காணப்படுகிறது. அது **சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. சம்பவத்தின்போது எனது கணவர் அணிந்திருந்த பாசிமாலை, படிகல் பாசிமலை, சின்ன ருத்ராஜ மாலை ஆகும். அது முறையே **சா.பொ.3 முதல் சா.பொ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வெள்ளைநிற பனியன் சம்பவத்தின்போது எனது கணவர் அணிந்திருந்த வெள்ளைநிற உள்பனியன் ஆகும். அது முழுவதுமாக இரத்தம் படிந்து காணப்படுகிறது. அது **சா.பொ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வெள்ளைநிற பனியன் சம்பவத்தின்போது எனது கணவர் அணிந்திருந்த கருநீலநிற ஜட்டி ஆகும். அது **சா.பொ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. இறந்துபோன எனது கணவரின் Vivo 30 செல்போனை நான் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் Vivo 30 செல்போன் புகைப்படம் (எண்ணம் 2) **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவம் குறித்து நான் உத்தமபாளையம், குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

8. எனது கணவர் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது கணவர் உத்தமபாளையத்தில் நிறைய நபர்களுக்கு பணம் கடனுக்கு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். காலையில் 9.00 மணிக்கு சென்றுவிட்டு, இரவு வருவார் என்றால் சரிதான், இரவு 11.00 அல்லது 12.00 மணியளவில் வீட்டிற்கு வருவது வழக்கம். அதிகாலையில் எழுந்து, நடைபயிற்சி சென்றுவிட்டு வேலைக்கு செல்வார் என்றால் சரிதான். பிள்ளைகளை பள்ளிக்கு யார் அழைத்துச் செல்வார்கள் என்றால் எனது கணவர் அழைத்துச் செல்வார்.

9. 1வது எதிரிக்கும், எனது கணவருக்கும் பைனான்ஸ் தொழிலில் பிரச்சனையாகி ஒருவர்மீது ஒருவர் வழக்கு தாக்கல் செய்து, அதன்பின்னர் சமாதானமாக முடித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதன்பின்பு எனது குழந்தைகள் பள்ளிக்கு செல்லும்போதும், 1வது எதிரியின் குழந்தையும் பள்ளிக்கு செல்லும்போதும் எனது கணவரும் 1வது எதிரியும் பேசிக்கொள்வது வழக்கம் என்றால் சரிதான். சம்பவத்தை கேள்விப்பட்டு, நான் சம்பவ இடத்திற்கு சென்று எனது கணவரை பார்க்கும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் சம்பவ தினத்தன்று காலை 8.45 மணி முதல் 9.00 மணிக்குள் இருக்கும்.

10. நான் லாட்ஜிக்கு சென்று எனது கணவரை பார்த்தப்போது லாட்ஜ் முழுவதும் போலீசார் கட்டுப்பாட்டில் இருந்து பொது நபர்கள் யாரையும் பார்க்க

அனுமதிக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னிடம் யார் என்று விசாரித்து உள்ளே அனுப்பினார்கள் என்றால் சரிதான். லாட்ஜில் பெயர், முகவரி விசாரித்து இறந்தவர் யார் என்ற விபரம் தெரிந்து கொண்டு, என்னிடம் எழுதி கையொப்பம் வாங்கினார்களா என்றால் விசாரித்தார்கள், ஆனால் கையொப்பம் எதுவும் வாங்கவில்லை, காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன்.

11. லாட்ஜில் வைத்து போலீசார் என்னிடம் யார் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று விசாரித்து சொல்வதாக கூறினார்கள் என்றால் சரிதான். அதன்பின்னர் நான் காவல்நிலையம் சென்றேன் என்றால் சரிதான். லாட்ஜில் என்னிடம் பெயர், விலாசம் விசாரித்து எழுதிய தாளில் காவல்நிலையத்தில் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் செல்லப்பாண்டி தகவல் சொல்லி சம்பவ இடத்திற்கு சென்றதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனது வீட்டிற்கும் சம்பவ இட லாட்ஜிக்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும்.

12. வீட்டிற்கும் லாட்ஜிக்கும் இடையே உள்ள வழியில் எனது கணவரின் பிரசாத் பைனான்ஸ் அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். வீட்டிற்கும் பைனான்ஸ் அலுவலகத்திற்கும் இடையே சுமார் 1/2 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். எனது வீட்டிலிருந்து பிராதான சாலைக்கு வந்தால் நிறைய கடைகள் இருக்கும் என்றால் சரிதான். லாட்ஜிலிருந்து எனது கணவரின் பிரேதத்தை அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள் என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை, எனது மாமியார் சென்றார்.

13. எனது கணவர் இறந்த மறுநாள் பிரேத பரிசோதனை செய்தார்கள் என்றால் சரிதான். பிரேத பரிசோதனைக்கு முன்பாக சம்பவ தேதிக்கு மறுநாள் காவல்நிலையம் வரச் சொல்லி என்னை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல,

பிரேத பரிசோதனை செய்த அன்று மருத்துவமனையில் தான் இருந்தேன். பிரேத பரிசோதனை செய்து முன்தினம் காவல்நிலையத்தில் இருந்தேன் என்றால் சரிதான். சம்பவ தேதியன்று மாலை இரண்டு எதிரிகளும் காவல்நிலையத்தில் இருந்த போது, நான் ஆஜர் எதிரிகளை பார்த்தேன் என்றால் சரிதான். நான் சொன்ன தேதி, மாதம், வருடம் காவல்நிலையம் செல்லவில்லை என்றாலும், புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

14. எனது கணவர் பைனான்ஸ் தொழிலில் பணம் வசூல் செய்யும்போது நிறைய நபர்களுடன் பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். எனது கணவர் குண்டாஸ் தடுப்பு சட்டத்தில் சிறையில் இருந்துள்ளார் என்றால் சரிதான். உத்தமபாளையம், குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுக்க போலீசார் என்னை அழைத்துச் சென்றார்கள் என்றால் சரிதான். போலீசார் என்னிடம் எனது கணவர் எவ்வாறு இறந்தார் என்ற விபரம் சொல்லி அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். உத்தமபாளையம், குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாக்கமூலம் கொடுக்கும்போது, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு செல்லும்படி அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான்.

15. எனக்கு இரண்டு சிறு குழந்தைகள் உள்ளதாலும், கணவர் இல்லாததாலும் அரசு வேலை கிடைக்கும் என்று போலீசார் சொன்னதின் அடிப்படையில் உத்தமபாளையம், குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் எனது கணவர் சிற்றுண்டி வாங்க சென்றதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. முன்விரோதத்தின் காரணமாக வேறு நபர்கள் கொலை செய்யப்பட்டார் என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

உண்மை சம்பவமும், உண்மை புகாரும் மறைக்கப்பட்டது என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 05.08.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.08.05 18:27:00 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
05.08.2026